Unilever

258, எம் வின்சென்ட் பெரேரா
மாவத்தை, கொழும்பு 14
0114700800

**பெயார்ஸ் தயாரிப்பு வரிசை சவர்க்காரங்கள் மற்றும் கிரீம்கள் தற்போது குழந்தை வைத்திய நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படுகின்றன**

*~ இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள 42 மருத்துவமனைகளுக்கு ரூபா 8 மில்லியன் பெறுமதியான பெயார்ஸ் தயாரிப்புகள் நன்கொடையளிப்பு ~*

**கொழும்பு, 28 மார்ச் 2022:** யுனிலீவர் நிறுவனத்தின் பிரதான குழந்தைப் பராமரிப்பு வர்த்தகநாமம் என்ற வகையில், இலங்கையிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் குழந்தை வைத்திய நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட தயாரிப்புக்களைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும் என்ற தனது நோக்கத்திற்கு உண்மையாக அர்த்தம் கற்பிக்கும் வகையில், அதன் பிரதான தயாரிப்பு வகை சவர்க்காரங்கள் மற்றும் கிரீம்கள் இப்போது சர்வதேச குழந்தை வைத்திய நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படுவதாக பெயார்ஸ் அறிவித்துள்ளது.

இது அறிமுகப்படுத்தப்பட்ட முதல் நாளிலேயே நாடு முழுவதும் உள்ள 42 மருத்துவமனைகளுடன் (குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுகளைக் கொண்ட) ஒரு ஈடுபாட்டு பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் வர்த்தகநாமம் இந்த உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது. இந்த நிகழ்வுகளில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குப் பயன்படுத்தவென, ரூபா 8 மில்லியன் மதிப்புள்ள பெயார்ஸ் தயாரிப்புகள் மேற்குறிப்பிடப்பட்ட மருத்துவமனைகளுக்கு நன்கொடையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கை பிரதமரின் துணைவியாரும், இலங்கையின் முதல் பெண்மணியும் மற்றும் குழந்தை உளவியல் வல்லுனருமான (2005 - 2015) ஷிராந்தி விக்கிரமசிங்க ராஜபக்ச அம்மையார்; யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹஜார் அலா∴பி∴பி; யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அழகு மற்றும் உடல் பராமரிப்பு உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் பணிப்பாளரும், நிறுவன தொடர்பாடல்களுக்கான தலைமை அதிகாரியுமான நிலுஷி ஜயதிலக; மற்றும் நிறுவனத்தின் ஏனைய அதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

பெயார்ஸ் தயாரிப்புகளின் பிரதான வரிசை பற்றிய அறிவிப்பு குறித்து கருத்து தெரிவித்த **யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அழகு மற்றும் உடல் பராமரிப்பு உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் பணிப்பாளரும், நிறுவன தொடர்பாடல்களுக்கான தலைமை அதிகாரியுமான நிலுஷி ஜயதிலக** அவர்கள், *''இலங்கையில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக குழந்தைப் பராமரிப்பில் பெயார்ஸ் நம்பகமான நாமமாக திகழ்ந்து வருவதுடன், இன்று இலங்கை தாய்மாரின் முன்னணி தெரிவாகவும் மாறியுள்ளது. ஒவ்வொரு குழந்தையின் சருமமும் அதற்குத் தகுதியான உணர்திறன் மற்றும் மென்நயத்துடன், மிக உயர்ந்த பாதுகாப்பு மற்றும் உத்தரவாதத்துடன் பராமரிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். அதனாலேயே எங்கள் முக்கிய தயாரிப்புகள் சர்வதேச குழந்தை வைத்திய நிபுணர்களால் பரிசோதிக்கப்படுவதை நாங்கள் உறுதிசெய்கிறோம். இதன் மூலமாக பெயார்ஸ் என்னும் போது மிகச் சிறந்ததை மட்டுமே நாம் வழங்குகிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

கடந்த பல ஆண்டுகளாக, பெயார்ஸ் சமூகத்திற்கு பிரதியுபகாரம் செய்யும் நோக்கத்துடன் பல்வேறு முயற்சிகளுக்கும், செயல் திட்டங்களுக்கும் ரூபா 60 மில்லியனுக்கும் மேற்பட்ட தொகையை முதலீடு செய்துள்ளது. அத்தகைய ஒரு முயற்சியானது, 2002 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட அதன் காக்கும் கரங்கள் (safe hands) திட்டமாகும். இது நாடு முழுவதிலும் உள்ள மகப்பேறு சிகிச்சை விடுதிகளை புனரமைக்கவும், புதுப்பிக்கவும் மற்றும் இலங்கை முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் மகப்பேற்று பராமரிப்புக்கு புத்துயிர் அளிக்கவும் முன்னெடுக்கப்பட்டது. பெயார்ஸ் எப்போதும் ஒவ்வொரு குழந்தையின் சிறந்த நலனை தன் இதயத்தில் கொண்டுள்ளது என்பதை இது சிறப்பாக நிரூபிக்கின்றது.